# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவ௵
கார்த்திகை௴ ௨௮௨ வியாழக்கிழமை.




## முருகன் திருவிளையாடல்.

ஞானந்தானுருவாகியநாயகனியல்பை
யானுநீயுமாயிசைத்துமென்றலஃதெளிதோ
மோனந்தீர்கலாமுனிவருந்தேற்றிலர்முழுதுந்
தானுங்காண்கிலனின்னமுந்தன்பெருந்தலைமை.

குமாரக்கடவுளைச் சாமானிய சிறுவன் என்று அவமதித் துரைத்த சூரபன்மனை அவன் தம்பியாகிய சிங்கன் பார்த்து "அண்ணு, ஞானமே தமக்குத் திருமேனியாகக் கொண்ட அந்தத் தெய்வத்தின் மகத்துவத்தை அறியாமையின்பாற்பட்டு முடங்கு கிடக்கும் நானும் நீயும் ஆராய்ந்து அறிந்து பேசுவதென்றல் அது முடியுங் காரியமோ; இடையரு மௌனவிரதம் பூண்ட முனிவர்களும் அந்த இறைவன் பெருமையை இன்னமும் பூரணமாகத் தெரிந்தாரல்லர்; தம் பெருமையை அப்பெருமான் தாமும் அறிந்திலர்" என்று சொன்னுன்.

பதியிலக்கணமென்பதை எட்டுணையும் எடுத்துக் கூறுத நூல்களைத் தஞ் சமயசாத்திரமெனக்கொண்ட அந்நியமதத்தினர் சிலர் எங்கள் குமாரத்தெய்வத்தையும் என்பு தோல் நரம்போடு கூடிய பூதயாக்கையை யுடைய ஒருவரென மதித்து அப்பெருமான் தெய்வநாயகியைக் கலியாணம்முடித்தார்; வள்ளியைக் களவெடுத்தார்; அவர்செய்த இச்செய்கைகள் சரியோ என்று ஆக்ஷேபஞ்செய்தால் அவர்களுக்கு என்ன சமாதானத்தைச் சொல்ல முடியும்.

மானுடத்தரில்விலங்கினிற்புட்களில்மற்றும்
வானுற்றுழல்யாக்கையிற்பிறந்துளரோப்ப
நீநினைக்கலை,பாந்சுடர்நெற்றியந்தலத்தே
தானுதித்தனன்மறைகளுங்கடந்ததோர்தலைவன்

வேதங்கட்கும் அதீதராய் விளங்கும் எங்கள் அறுமுகத்தெய்வம் யோனிவாய்ப்பட்டுப் பிறந்ததென்று எண்ணுதே; பரஞ்சோதியாகிய சிவபிரானுடைய நெற்றிக்கண்ணினின்றுமே அத்தெய்வம் தோன்றியது; வள்ளியம்மை திருமணப்படலச் சரித்திரம் முழுவதும் தத்துவார்த்தத்தோடு கூடியது. அது பாமரருக்கு எடுத்து விளக்கும் பான்மைத்தன்று. பக்குவமடைந்த ஆன்மாவைப் பதி ஆட்கொண்டமையென்பதே அதன் பொழிப்பு. சீலமிலவர்க்கு உணரொணுச் சிற்பரன், அருவுமாகுவன், உருவமுமாகுவன், அருவும் உருவமுமில்லதோர் தன்மையுமாகுவன், ஊழின் கருமமாகுவன், நிமித்தமுமாகுவன் கண்டாய், பரமனுடலை யாவரே பகர்ந்திடப்பாலர்! முருகக்கடவுளின் ஞானசத்தி தெய்வயானையம்மையென்றும் கிரியாசத்தி வள்ளிநாயகியென்றும் கந்தபுராணங் கூறும். சத்தியின் இயல்பு முன்னர் விளக்கப்பட்டது.

ஞானம் இம்மியின் அணையுமில்லாப் பாமரர் இங்ஙனம் மயங்குவரென்பதைக் குறித்தே திருவருட்செல்வராகிய கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் வள்ளியம்மை திருமணப் படலத்தில்,

"உலைப்படுமெழுகதென்னவுருகியேஒருத்தி
காதல், வலைப்படுகின்றன்போலவந்தியே
யிரங்காநின்றன், கலைப்படுமதியப்புத்தேள்
கலங்கலம்புனலிற்றேன்றி, அலைப்படுதன்
மைத்தன்றேஅறுமுகனுடலேல்லாம்."

என்று கூறினர். குமாரவேள் வள்ளிநாயகியிடஞ் சென்றதும் அவளை யிரந்ததும் வேங்கைமரம் முதலியவாக நின்றதுவும் எதுபோலெனின், சந்திரனுடைய பிரதிவிம்பம் நீர்நிலையிற் காணப்பட, அந்த நீர் காற்றினுல் அசைய, அதன்கண் காணப்படும் பிரதிவிம்பமும் அசைவதுபோல் தோற்றுந் தன்மையதாம் இவற்றை அந்நியமதப் பாமரருக்கு விளக்க முயலுதல், பிறவிக் குருடனுக்குப் பால் புரைக்கேறிய வரலாற்றை விளக்க முயறவாய முடியும். சிறக,

பிள்ளையாருக்குக் கல்யாணம் பேசி இன்னுமொரு முற்ருகவில்லையென்று கேட்ட சிறிதவருக்கு நமது அபிமானி, அப்படி யொருவருங் கல்யாணம் பேசவில்லையென்றும் பிள்ளையாருடைய மூர்த்தங்களுள் ஒரு மூர்த்தத்திற்குச் சித்தி புத்தி என இரு சத்திமாருண்டென்றும் சொல்

### உலகம் பலவிதம்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கல்லூரியில் ஸீனியர்வகுப்பிற்படித்த ஒருமாணுக்கனைப் பரீட்சைக்குப் போகாது, கல்லூரி அதிகாரிகள் தடுத்துவிட்டனர் காரணம் திறமைபோதாமையாம். இன்னமாக, குறித்த சிறுவன், "பரீட்சையெடாது இப்படி மானங்கெட்டிருப்பதைக் காட்டிலும் கயிற்றைக் கட்டிக் கழுத்திற் சுருக்கிட்டு என்னுயிரை விடுவதே உத்தமமென்று நினைத்துப்போனும். கயிறு வாங்குவதற்காகத் தெருவுக்குச் சென்று ஒரு கடையில், தனக்கான ஒரு கயிற்றைத் தெரிந்தெடுத்து விலை கேட்க, கடைக்காரன் 50 சதம் விலை சொன்னுன். வாலிபன் "40 சதந்தான் தருவேன்" என்று கேட்டான்; கடைக்காரன் சம்மதிக்கவில்லை; பையன் இன்னுமொரு 5 சதத்தை வைத்து 45 சதம் தருவதாகக் கேட்டான்; அதற்கும் கடைக்காரன் இல்லையென்ருன்; 5 சதத்தை அநியாயமாகக் கூடக் கொடுத்து இக்கயிற்றை வாங்கிக் கட்டித் தூங்குவதைக் காட்டிலும், மானம் போனுலும் உயிருடனிருத்தல் நல்லதென்றெண்ணித் தூங்காது விட்டானும். இதனைப் பின்னர்க் கேள்விப்பட்டவர்கள் கடைக்காரனுடைய ஐந்து சதந்தான் சிறுவனுடைய உயிரைக் காத்தது என்று சொல்லிச் சிரித்தார்களாம்.

* * *

உலகத்திலே இயல்பாகவே மறதியுள்ள, அல்லது பாராமுகத்தோடு கூடிய மனுஷர்கள் (Absent-minded men) இருக்கிருர்கள்; இந்தக் குணத்தினுல் இவர்கள் சிற்சில சமயங்களில் தமக்காயினும் பிறர்க்காயினும் பெரும் கஷ்டம் விளையக்கூடிய கருமங்களைச் செய்துவிடுவதுமுண்டு; சிலசமயங்களிலே இவர்கள் செய்யுஞ் செயல்கள் பார்ப்பவர்களுக்கு அப்பொழுதுமாத்திரமல்ல, நினைக்கும் போதெல்லாம் பெருஞ் சிரிப்பைத் தரத்தக்கவாயிருக்கும். பிறவூரில் உத்தியோகமாக விருக்கும் ஒருவர் ஒருமுறை விடுமுறை நாட்களில் தமது மனைவி மக்களிடம் ஊருக்கு வந்திருந்தார்; விடுதலை நாட்கள் முடிந்து அவர் உத்தியோகதானத்திற்குப் போக வேண்டிய அன்று, நவீன நாகரிகத்தை அநுசரித்த அவருடைய மனைவியும் அவரைப் பயணமனுப்பும்படி புகைரதஸ்தானத்திற்குச் சென்றிருந்தாள். சிறிது நேரஞ் செல்லப் புகைரதம் அங்கே வந்துவிட்டது; ஆனுல் குறித்த நேரத்திற்குச் சிறிது பிந்தித்தான் அன்றைக்குப் புகைரதம் வர நேர்ந்தது பிரயாணிகளெல்லாரும் தங்கள் தங்கள் பயணப்பைகளையும் மற்றைப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு வெகு அவசரத்துடன் புகைவண்டியில் 16 பேர் எனக் குறிக்கப்பட்ட வண்டிக்கு 32 பெயர் என்னும் கணக்குப்பட ஏறி நெருங்கியிருந்தார். நமது உத்தியோகஸ்தர் புகைரதஸ்தானத்திற்கு வந்த நேரந் தொடக்கம் "போட்டர்" எனப்படும் பணியாளனெருவன் அவருடைய பயணப் பொருட்களை எடுப்பதும் குறித்த ஸ்தானத்திற் கொண்டுபோய் வைப்பதும் அவருக்கு, சிக்கறற் சுருட்டு வெற்றிலை வாங்கிக்கொண்டு வந்து கொடுப்பதுமாக அவருடைய கருமத்தையே பார்த்துக்கொண்டு நின்ருன். புகைவண்டி ஸ்தானத்தை யடைந்தவுடனே, குறித்த போட்டர் இரண்டாம் வகுப்பில் வசதியான ஒரு வண்டியைப் பார்த்துக் கதவைத் திறந்து இவருடைய பயணப் பொருட்களையெல்லாம் சாவதானமாகக் கொண்டுபோய் வண்டிக்குட் பக்குவமாக வைத்துவிட்டு உத்தியோகத்தனிடம் ஓடிவந்து 'ஐயா இன்றைக்குப் புகைரதம் கால்மணிநேரம் பிந்திவந்தது, ஆனதாற் சீக்கிரம் புறப்பட்டுவிடும்; காலதாமதமில்லாமல் ஏறுங்கள்" என்று சொன்னுன். உத்தியோகத்தர் உடனே போய் வண்டியில் ஏறிக்கொண்டார். காதலியும் அவர் பின் சென்று வண்டியின் கதவோடு நின்று அவருடன் புகைரதம் புறப்படும் வரைக்கும் பேசினுள் அபிநாசப்பிய காதவர் காதலிகள் நண்பர்கள் பிரிந்து போகும் போது ஒருவரையொருவர் விசேஷமாகப் பெண்களை ஆண்கள் முத்தமிடுவது

வழக்கம். நம்மவர்கள் ஒருபோது அந்தரங்கமான இடத்தில் இப்படிச் செய்தாலும் புகைரதஸ்தானம போன்ற பகிரங்கமான இடத்தில் ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டார்கள்; ஆனுல் ஐரோப்பிய நாகரிகத்தை முற்ருகப் பின்பற்றியவர்கள் இப்படியான இடத்திலும அப்படிச் செய்யப் பின்னிடார்கள்; நமது உத்தியோகத்தரும் மனையாளும் இந்த நவீனவகுப்பைச் சேர்ந்தவர்கள்; இதற்கிடையிற் புகைரதம் புறப்படுவதற்கு அடையாளமாகக் குழல் ஊதப்பட்டது; புகைரதம் ஊரத்தொடங்கிவிட்டது; பரம்மாத்திற் காகம் போல உத்தியோகத்தனையே சுற்றிக்கொண்டு நின்ற போட்டரும் ஓடிப்போய் உத்தியோகத்தன் நிற்கும் பெட்டியின் வாசலில தலைகாட்டினுன்; உத்தியோகத்தன் மிக்க அவசரத்தோடு தன் மனையாள் கையில் ஏதோ கொடுத்துவிட்டுப் போட்டரை முத்தமிட்டான். புகைரதம் ஸ்தானத்தை விட்டு அப்பாற் போய்விட்டது. தன்னுயசன் போட்டரை முத்தமிட்டமையை ஆச்சரியத்தோடும் ஆத்திரத்தோடும் பார்த்துக்கொண்டு நின்ற மனையாள் பின் தன் கையை விரித்துப்பார்த்தாள் காசு 25 சதம் இருந்தது. போட்டர் ஏமாந்து போய் நின்ருன்; இவற்றையெல்லாம் ஆதியோடு அந்தமாகப் பார்த்துக்கொண்டு நின்ற நமது முருகேசு உத்தியோகத்தன் மனைவியும போட்டரும் அதிக யோசனையோடு நிற்கும் அந்த இடத்திற்குப் போய் உத்தியோகத்தன் மனைவியைப் பார்த்து "பிள்ளை, பயணக்காரன் பைத்தியகாரன் என்பர்; அவசரக்காரனுக்குப் புத்திமட்டு, அல்லாமலும் உன்னுடைய அவர் இயல்பாக மறதிக்காரன் என்பது உனக்குத் தெரியும்; பாராமுகத்தினுல் இப்படி மாறிக்கொடுத்து விட்டுப் போய் விட்டார்; அதிலென்ன வந்த நட்டமொன்றுமில்லை; இப்பொழுது நீங்கள் மாறிக்கொடுக்கலாந்தானே, உந்தக் காசு 25 சதத்தையும் போட்டரிடம் கொடுத்து விடலாமே" யென்ருர் உத்தியோகத்தன் மனையாள் உடனே காசு 25 சதத்தையும் போட்டரிடம் கொடுத்தாள்; போட்டர் அதை நமஸ்காரத்தோடு வாங்கிக்கொண்டு "ஐயா மாறிக் கொடுத்ததை அம்மா நீர் எனக்குத்தந்துவிட்டீர்; ஆனுல் நானும் அப்படி மாறித்தர முடியாமலிருக்கின்றதே" என்ருன். போட்டர் வார்த்தையைக் கேட்ட அம்மாது சில நிமிஷம் யோசித்து அவன் சொன்ன பரிகாசத்தை விளங்கிப் பெரும் வெட்கத்தோடும் துயரத்தோடும் போய் அப்புறம் நின்ற மோட்டாரதத்தில் ஏறிக்கொண்டு தன் இல்லஞ் சேர்ந்தாள்.

* * *

மறதியோடு கூடிய இயல்புடைய இன்னுமொருவர் செயலைச் சொல்லுகின்றேம். மறதியுள்ள அந்த மனுஷன் மாரிக்காலத்தில் ஒருநாள் இரவு ஏதோ கருமார்த்தமாக வீட்டினின்றும் சிறிது தூரமான இடத்திற்குப் போய் மீண்டு வரும் மார்க்கத்திற் பெருமழை பெய்ய அதனுல் அவர் தாம் பிடித்திருந்த குடை அணிந்திருந்த உடை தம்முடம்பு எல்லாம் அற நனையப்பெற்றவராய் வீடு வந்து சேர்ந்தார். வந்தவுடன் ஈர உடையைப் பிழிந்து கொடியில் உலரும்படி இட்டுவிட்டுத் தமது குடையை எடுத்து, படுக்கையறையுட் போய் மெத்தை முதலாம் படுக்கையைத் தட்டி விரித்துக் கால்மாட்டிலுந் தலைமாட்டிலுந் தலையணைகளை வைத்து மேலே சீலை விரித்து அக்குடையைக் கிடத்தி அதனைக் கம்பலப் போர்வையாற் போர்த்துவிட்டு அந்த அறையின் ஒரு மூலையில் தம்முடம்பைச் சுவரோடு சார்த்திக் கொண்டு நின்ருர். இந்தச் சமயத்திலே அவருடைய மனையாள் அங்கே வந்தாள் வந்தவள் குடை மெத்தையிற் பக்குவமாகக் கிடத்தப்பட்டிருப்பதையும் தன் கணவன் மூலையிற் சார்ந்தபடி நிற்பதையுங் கண்டு ஆச்சரியமடைந்து அவருக்குத் தலையில் ஏதோ பிசகு நேர்ந்துவிட்டது போலுமென்று ஏக்கங்கொண்டு "இது என்ன" என்று வினவினுள் அதன் பின்னர்த்தான் அந்த மனுஷன் கண்விழித்து வாயிற் கைவைத்து, தன் மனையாளைப் பார்த்து "வேறொன்றுமில்லை, குடையை நான் என்று நினைத்துக்கொண்டு மறதியாய் இப்படி என் படுக்கையிற் பக்குவமாய்க் கிடத்திவிட்டு குடையென்று என்னை நினைத்துக் கொண்டு, தண்ணீர் வடியும்படி குடையை மூலையிற் சார்த்தி விட்டேன் என்றெண்ணி நானே மூலையில் நிற்கிறேன்; ஐயோ, என் மறதியைப் பார்" என்று மனையாளுக்குச் சொல்லிப் பச்சாதாபப்பட்டாராம்.

---

வாராக. மேலும் சைவசமயத்தில் ஏதும் ஆட்சேபம் நிகழ்த்துவதாயின் அங்ஙனஞ் செய்ய விரும்புவோர் பதி பசு பாச இலக்கணங்களை எடுத்துச் சந்தேகவிபரீதமறப் பிரதிபாதிக்கும் மெய்கண்டசாத்திரமாகிய சிவஞானசித்தியார் முதலாம் பதினன்கு சித்தாந்தசாத்திரங்களிற் கூறப்பட்ட விஷயங்களில் ஆட்சேபம் நிகழ்த்தவாராக.

### குமரேச சதகம். ௬0.

—:o:—

வியாதிக்கு மூலங்கள்.

கல்லினுன் மயிரினுன் மீதூணவிருப் பலாற்
கருதியவிசாரத்தினுற்
கடுவழிகடக்கையாலமலசலமடக்கை
கனிபழங்கறியுண்ணலால் [யாற்
கெல்லினுழியினுனுண்டபின்மூழ்கலா
னித்திரைகளில்லாமையா
னீர்ப்பகையினுற்பனிக்காற்றினுடனே
னிடுசருகிலையூறலால் [தலா
மெல்லிகல்லார்கலவியதிகமுள்விரும்பலால்
வீழ்மலஞ்சிக்குகையினுன்
மிருசுமையெடுத்தலாலிளவெயிற்காய்த்த
மெய்வாடவேலைசெயலால் [லான்
வல்லிரவினிலேதயிர்கன்சாகாதியுண்ணலால்
வன்பிணிக்கிடமென்பர்காண்
மயிலேறிவிளையாடிகுகனேபுல்வயனிடு
மலைமேவுகுமரேசனே.

இ-ள்: உண்ணப்படும் உணவில் கல் மயிர் இருத்தலினுலும், அளவுக்குமேற்பட உண்பதினுலும், யோசனையோடுகூடிய கவலையினுலும, அதிக தூரம் நடந்து செல்லுதலினுலும், வேண்டிய காலத்தில் மலசல விமோசனஞ் செய்தலின்றி அவற்றை அடக்க முயல்வதினுலும், அறக்கனிந்த கனிகளையும் முதனுட் சமைத்த கறியையும் உண்ணுவதினுலும், கெல்லுமி என்னுமிவைகள் உணவுட் செறிதலாலும், போசனஞ் செய்தபின் எண்ணெயிட்டு முழுகுதலாலும், பல இரவுகளில் அடுத்து நித்திரை விழித்தலினுலும், தண்ணீர்வேற்றுமையினுலும, பனியும் குளிர்காற்றும் உடலிற் பட்டு மெலிவுண்டாதலினுலும், ஈடித்த நாட்களாகச் சருகுகள் வீழ்ந்து ஊறிய நீரை உபயோகித்தலினுலும், பெண்போகத்தை அதிகம் விரும்புதலினுலும், கழியவேண்டிய மலங் கழியாது சிக்கியிருத்தலினுலும், பாரமான சுமைகளைச் சுமத்தலினுலும், காலைவெய்யிற் காய்தலினுலும், உடம்பு அதிகம் இளைக்க வேலை செய்தலினுலும், கடிய இராக்காலத்தில் தயிர் மோர் (கீரை முதலிய) இலைக் கறிகளை உண்ணுவதினுலும், கொடிய ரோகங்கள் வந்துசேரும் என்று வைத்தியர்கள் சொல்லுவார்கள்; மயிலேறி விளையாடு குகனே புல்வயல்நீடு மலைமேவு குமரேசனே என்றவாறு.

கனி பழங்கறி என்பதற்குப் பதங்கெட்ட பழமும் பதங்கெட்ட கறியுமெனப் பொருள் கொள்ளினுமாம். நித்திரைகள் எனப் பன்மையிற் கூறியமையினுல் பல இரவுகளில் அடுத்து எனப் பொருள்கொள்ளப்பட்டது. காண்-முன்னிலையசை.

---

காலநிலை.

மழை இன்று ஒருவாறு வெளித்திருக்கிறது.

---

### ஞானமிர்த கதாப் பிரசங்கம்.

கல்லூரைச் சேர்ந்த கல்வியங்காட்டு வீரபத்திரகோவிற் சன்னிதானத்தில் இன்றிரவு (12-12-28) எழு மணி தொடக்கம், ஸ்ரீ சங்கரசுப்பிரமணிய சச்சிதானந்த ராஜயோகிகள் சுத்தனென வழங்கும் திருநாளைப்போவாருடைய சரித்திரத்தைப் பக்கவாத்திய சகிதமாகப் பிரசங்கஞ் செய்வார்களென அறியலானேம்.

---

### ஸீனியர் ஜூனியர் பரீட்சைகள்.

கேம்பிறிஜ் சர்வகலா சங்கத்தாரின் ஸீனியர் ஜூனியர் பரீட்சைகள் இலங்கையில், சென்ற வெள்ளிக்கிழமை (7-12-28) தொடக்கம் நடைபெறுகின்றன; வருகிற சனிக்கிழமை (15-12-28) வரையில் இப்பரீட்சைகள் நடைபெறும்.

---

### மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

தல்ப்பே என்னுமிடத்தில். கணவனை மனைவி கொன்ருட்டிக்கொன்ற வழக்கில் 1-ம் எதிரியாயிருந்து மரணதண்டனை விதிக்கப்பெற்ற ஜேப்பேட்டிசில்வா கருணாத்தினமென்பவர் சென்ற வியாழக்கிழமை கொழும்பிலுள்ள வெலிக்கடை மறியற்சாலையில் தூக்கிட்டுக்கொல்லப்பட்டார்.

---

### ஆசிரியர் அமிழ்ந்தி இறந்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ளவரும், இப்பொழுது மட்டக்களப்பு மத்தியகல்லூரியில் ஆசிரியராயிருந்தவருமாகிய எட்வேட் அம்பலவாணர் என்பவர் தமது கல்லூரியின் பிரதம ஆசிரியரோடும் சில மாணவரோடுங் கடலுக்குச்சென்று குளித்துக்கொண்டு நிற்கும் சமயத்தில் நீரோட்டத்தால் இழுக்கப்பட்டு அமிழ்ந்தி இறந்தனர். அதைக்கண்ட ஒருபையன் அவருடைய கையிற்பிடித்து இழுக்கும் பொழுது கைப்பிடி தவறிவிட்டது. விஷயம் பொலிசர்க்கு அறிவிக்கப்பட்டதும் அவர்கள் ஆசிரியரின் பிரேதத்தைத் தேடிப்பார்த்தனர். ஆனுல் அகப்படவில்லை.

### தவறணைகளெல்லாம் ஒழிந்தன.

குருநாகல் பட்டினத்திலுள்ள தவறணைகளெல்லாம் சென்ற செப்டெம்பர் மாசம் 30உ தொடக்கம் சனசம்மதத்துடன் நீக்கப்பெற்றன. ஆனால் வெள்ளவா என்னுமிடத்திலும், பண்டித்கரவியா என்னுமிடத்திலுமுள்ள சாராயத் தவறணைகள் சென்ற வருடம் நீக்கப்படாதொழிந்தன மதுவிலக்கபிமானிகளின் முயற்சியால் அத்தவறணைகள் இரண்டும் 1926-ஆ செப்டெம்பர்மீ முதல் நீக்கப்பட்டுவிட்டன.

### ஓர் பையனும் அவன் பராமரிப்புக்காரனும் தண்டிக்கப்பட்டார்கள்.

தோப்பிதோட்டத்திலுள்ள பொலிஸ் கோட்டில் 14 வயதுள்ள ஓர்பையன் புடைவைதிருடினதாகக் குற்றஞ்சாட்டப் பட்டான். பின் அவன் குற்றவாளியாகக் காணப்பட்டு அவனுக்கு 8 அடி அடிக்கும்படியும் 6 மாதம் கல்கடத்தைப்பிணையில் விடும்படியும் விதிக்கப்பட்டது அப்பையனைப் பராமரிப்பவன் அவனைப் பற்றி எச்சரிக்கையாயிராதபடியால் அப்பராமரிப்புக்காரனுக்கும் கோட்டார் 30 ரூபா அபராதம் விதித்தனர்.

### சிவில் சேர்விஸ் பரீக்ஷை.

லண்டனில் 1929-ம் ஆண்டு ஜூலை மாசத்திலும் ஆகஸ்ட் மாசத்திலும் நடத்தப்படவிருக்கும் இந்திய சிவில் சேர்விஸ் பரீக்ஷைக்குச் செல்ல விரும்புவோருக்குரிய பிரமாணங்கள் சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த அரசினர் "கஜற்" பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கின்றன இலங்கைச் சிவில் சேர்விஸ் பரீட்சைக்கு இலங்கையிலிருந்து செல்ல விருப்புவோர்க்காகக் கொழும்பிலும் லண்டனிலும் ஒரே நேரத்தில் அப்பரீட்சை நடத்தப்படும். அதற்குரிய பிரமாணங்கள் கூடிய சீக்கிரம் வெளியிடப்படுமோம்.

## நூல்களைப்பற்றியகுறிப்பு.

### ஸ்ரீ கணபதி சகஸ்ர நாமாவளி.

விநாயகப் பெருமானுக்குரிய சகஸ்ர நாமங்களும் அஷ்டோத்தரசத (108) சோடச (16) நாமங்களும் சமஸ்கிருத உச்சரிப்புப் பேதப்படாவண்ணம் வடமொழி அட்சரங்களையும் விரவித் தமிழில் அச்சிட்டு அழகுற வெளிவந்திருக்கின்றன. இவற்றோடு கணபதி சதுர்த்தி பூஜாகல்பமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. விநாயகபூசை செய்வோர்க்கு அர்ச்சனைக்கும் பாராயணத்திற்கும் இப்புத்தகம் இன்றியமையாததாகும். இதனைப் பிழையற அழகுறச் சிறிய பிரமாணத்தில் அச்சிட்டவர்கள்: சென்னை, சாது இரத்தினசற்குரு புத்தகசாலை யதிகாரிகளாவர். பிரதியொன்றன் விலை அணா 4.

### ஸ்ரீ சுப்பிரமணிய சகஸ்ர நாமாவளி.

இந்நூலும் மேற்படி முறையை அநுசரித்து, குறித்த புத்தகசாலை அதிபர்களால் இனிது அச்சிட்டு வெளிவந்திருக்கின்றது. இதன்கண் சுப்பிரமணியப் பெருமானுக்குரிய அஷ்டோத்தரசத நாமங்கள் சோடசநாமங்கள் சகஸ்ர நாமங்கள் அடங்கியுள்ளன. முருகனடியார்க்கும் குகாலய அர்ச்சகர்கட்கும் இது முறையே பாராயணத்திற்கும் அர்ச்சனைக்கும் பெரிதும் பயன்படும். பிரதியொன்றன் விலை அணா 3.

இப்புத்தகசாலை யதிபர்கள் ஏனைய மூர்த்திகட்குரிய சகஸ்திர நாமாவளிகளையும் இங்ஙனம் அச்சிட்டுச் சைவ வைஷ்ணவ அன்பர்களுக்குப் பெரிதும் உபகாரமாம்படி வெளியிடுவர்களென எதிர்பார்த்திருக்கின்றேம்.

### ஸ்ரீ லகு ராமாயணம்.

ஸ்ரீலகு ராமாயணம் (ஸ்ரீராமடபாசகாக்கிரமோபதேசம்) வரகவி ஸ்ரீ அ. சுப்பிரமணியபாரதியார் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்த பிரதியை, சாது கோ வடிவேலுச்செட்டியாரவர்களைக்கொண்டு பரிசோதிப்பித்து சாதுரத்தினசற்குரு புத்தகசாலை யதிபர்களே இந்நூலையும் இனிது அச்சிட்டுள்ளனர். வைஷ்ணவர்கட்கு இந்நூல் விசேஷமாகப் பயன்படும். பிரதியொன்றன் விலை அணா 4.

மேலே சொல்லப்பட்ட மூன்று பிரதிகளையும் பெற விரும்புவோர்: சாது இரத்தினபுத்தகசாலை, 43-4 கபினியப்பநாயக்கன் தெரு, பார்க்டவுன் (P.O.) சென்னை. என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாகும்.

### ஸோர். அருணாசலமவர்களின் சிவிய சரித்திரம்.

இலங்கையிலுள்ள தமிழ்ச் சனங்களின் தலைவராயும் வித்தியாபிமானியாகவும் விளங்கிய ஸேர்பொன் அருணாசலமவர்களின் சிவிய சரித்திரத்தை, நவாலி தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ க சோமசுந்தரமவர்கள் 51 அரிய செய்யுட்களால் சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்னும் உத்தியை அநுசரித்து நன்கு பாடியுள்ளார். மேற்படி பண்டிதரின் தம்பியருளொருவராகிய ஸ்ரீ க. வேலுப்பிள்ளையவர்கள் இதனை அச்சிடுவித்து வெளியிட்டுள்ளனர் பாக்கள் இனியன. தமிழ் மக்களாற் பின்பற்றத்தக்கவராகிய ஸ்ரீ அருணாசலமவர்களின் சிவிய சரித்திரத்தை ஏனைய தமிழ்ச் சாதியபிமானிகளும் இளைஞரும் படிப்பார்களாக.

### இராமநாதன் கல்லூரிச் சஞ்சிகை.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரிச் சிறுமியர்களால் வெளியிடப்படும் மேற்படி கல்லூரிப் பத்திரிகையின் 3-ம் 4-ம் இலக்கப் பிரதிகள் ஒருங்கு சேர்த்து, வெளியிடப்பட்ட சஞ்சிகை வடிவமான பத்திரிகை வரப்பெற்றேம். மேற்படி கல்லூரியின் விருத்தியைக் குறித்த விஷயங்களும் அரிய வியாசங்களும் பிறவும் இச்சஞ்சிகையில் ஆங்கிலத்திலும் தமிழிலுமடங்கியுள்ளன. பிரதிகள் அழகாக அச்சிடப்பட்டுள்ளன.

எமது பார்வைக்கனுப்பிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் நன்றியறிதலுடன் ஏற்றுத் துதிகூறுகின்றேம்.

### மார்கழிமாச விசேஷதினங்கள்.

| | | |
|---|---|---|
| கஉ | (17-12-28) | திங்கள், நல்லூர் கைலாசபிள்ளையார், சண்டிருப்பாய் கல்வளை விநாயகர், நவாலிசிந்தாமணிப் பிள்ளையார், வாணி குப்பிட்டான் புலம் கற்பகப்பிள்ளையார், திரிகோணமலை மணையாவெளி திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கயமுகசங்கார உற்சவம். |
| சஉ | (18-12-28) | செவ்வாய், திருவெம்பாவைப்பூசாரம்பம் விநாயகஷஷ்டி விரதம் (பெருங்கதை) |
| எஉ | (21-12-28) | வெள்ளி, வாயிலார் நாயனார் குருபூசை |
| கூஉ | (23-12-28) | ஞாயிறு, சுவர்க்கவாயில் ஏகாதசி |
| க0உ | (24-12-28) | திங்கள், பிரதோஷம் கார்த்திகை விரதம் |
| கஉஉ | (26-12-28) | புதன், பூரணைவிரதம் |
| கநஉ | (27-12-28) | வியாழன், நடேசர் ஆர்த்திராதரிசனம் சடையநாயனார்குரு பூசை |
| கஅஉ | (1-1-29) | செவ்வாய், இயற்பகை நாயனார் குருபூசை |
| உஉஉ | (5-1-29) | சனி, மானக்கஞ் சாறநாயனார் குரு பூசை |
| உருஉ | (8-1-29) | செவ்வாய், பிரதோஷம் |
| உஎஉ | (10-1-29) | வியாழன், அமாவாசை விரதம், கோச் செங்கட்சோழநாயனார் குருபூசை. |

### பித்தளை.

செம்போடு கலந்த உலோகங்கள் பல வேலைகளுக்கு உபயோகப்படுகின்றன. தற்காலம் வழக்கத்திலுள்ள பித்தளையில் செம்பு 66 பங்கும், துத்தம் 34 பங்கும் சேர்ந்திருக்கின்றன. இவைகளில் அளவுகளை வித்தியாசமாகக் கலந்து பலவிதமான பித்தளை, வெண்கலம், தராமுறி என்னும் உலோகங்களைச் செய்யலாம். பிகுதியாகச் செம்பு 90 பங்கும், தகரம் பத்துப் பங்குமாகச் சேர்த்துப் பீரங்கிகளைச் செய்வதாகத்தெரிகின்றது உருவங்கள் 91 பங்கு செம்பும், 6 பங்கு துத்தமும், இரண்டுபங்கு தகரமும், ஒருபங்கு ஈயமும் கலந்து செய்கின்றார்கள். செம்பை வெடியுப்புத் திராவில் (னைட்ரிக் ஆசிட்டில்) கரைத்து, நீலநிறமுள்ளதும், பூக்கக்கூடியதுமான ஒருவகை உப்பை உண்டாக்கலாம் இது மிகக் காரமுள்ளதாகவும் இலேசில் பிடிக்கக்கூடியதாகவும் இருக்கும், செப்புச்சாமான்களின் மீது வழக்கமாகப் பிடிக்கும் பச்சைநிறமான களிம்பு, செம்புசேர்ந்த ஒருவகை உப்பு என்று முன்னமேசொன்னேம் செப்புத்தகடுகளில் காடியை இட்டும், எலுமிச்சை, திராட்சை முதலிய புளிப்பான பழச்சாறுகளைச் சேர்த்தும் களிம்பை உண்டாக்குகின்றார்கள். இக்களிம்பை, சிறங்குகளுக்கு மிகுதியாக உபயோகிக்கின்றார்கள். பொதுவாகச் செம்பின் உப்புக்களும் மிகுதியாக நீலம் அல்லது பச்சை நிறமானவைகளாகவே காணப்பட்டு விக்கப்பட்டு வருகின்றன அவைகள் தண்ணீரிற் கரையும். அவைகள் ஒருவிதமான சப்பான உருசியை உண்டாக்கும். செய்வகைகளில் செம்பின் களிம்பு காரமும் நஞ்சும், நன்றாய்த் தேய்த்து பிறகு [illegible] செப்புப் பாத்திரங்களில் சமைப்பது நியாயமாகும். புளி புள்ள உணவுப்பொருளைச் செப்புப்பாத்திரங்களில் சமைப்பதால் களிம்பு ஆகாரத்திற் சேரும். ஆதலால் செப்பு எனக்களைச் சமையலுக்கு உபயோகிப்பது நல்லதல்ல செப்புத்தாம்பாளங்களில் கண்களுக்கு மை செய்வதும், அக்கண்மைகளைச் செப்புச்சிமிழ்களில் வைத்துக்கொள்ளுவதும் நலமெனத்தெரிகின்றது. மேல்நாட்டார் செம்பை உள்ளுக்குச் சாப்பிடும் மருந்துகளாகச் செய்வதில்லை; வேறொரு மருந்தோடு சேர்த்து உள்ளுக்குக் கொடுப்பதும் இல்லை; உணவுகளைச் செப்பேனங்களில் வைப்பது மில்லை. செப்பு உப்புகள் மேல் உபயோக மருந்துகளாய்ச் செய்யப்படுகின்றன. செம்புத் தகட்டின் மேல் வெள்ளி, இரசம் படியும்.

—மருத்துவன்

## சமாசாரக்கொத்து.

—:0:—

பூனாவுக்குச்சமீபத்திலுள்ள பாட்கார் என்னுமிடத்தில் கட்டப்பட்டபிரமாண்டமான அணை வேலை பூர்த்தியாயிற்று. இதன் செலவு 12 லட்சத்து 50 ஆயிரம்பவுணும். இதில் அடங்கக்கூடிய தண்ணீரினளவு 15000 கோடி கலனும். இதனால் நீர்ப்பாய்ச்சக்கூடிய நிலத்தின் விஸ்தாரம் 834000 ஏக்கராகும். தற்போது வருஷமீதம் 202000 ஏக்கர் நிலம் சாகுபடி செய்தால் 24 லக்ஷம் பவுன் அதிக வருமானம் ஏற்படுமோம். இவ்வணைக் கட்டிடத்தின் கனம் 2 கோடியே 10 லக்ஷம் கன அடியாம். இதை முடிக்க 13 வருஷமாயிற்றும்.

※ ※ ※

சீயம் தேசத்துப் பூனைகள் வெகுசிலவேயிருக்கின்றன. 200 வருட காலமாக அவைகள் பாங்காக் பட்டணத்தில அரசரும் அவருடைய பரிவாரங்களும் வசிக்கும் பக்கங்களில் மட்டும் காணப்பட்டன. 1885-ம் வருடம் ஐரோப்பிய ஸ்திரீ யொருத்தி இரண்டு பூனைகளை இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றனாம். அவைகளைக்கண்டு பிரமித்த யாவரும் அவற்றை வாங்க ஆரம்பித்தனர். ஒரு பூனை ஒன்றுக்கு 3 பவுன் கேஷிலிங்கு விகிதம் லண்டனில் இப்பூனைகள் விலைபோகின்றன. இதன் ஆச்சரிய மென்னவென்றால் சீயம் பூனைகள் பிறவியில் வெண்மையாக இருக்கின்றன. ஆனால் நீண்டகாலத்திற்குப் பிறகு அவைகள் கறுப்பாக மாறிவிடுகின்றனவாம். பிறந்த ஒருவாரத்திற்கெல்லாம் பூனைக்குட்டியின் காது நுனிகளும் வாலும் நிறம் மாறுகின்றன. படிப்படியாக நிறமாற்றம் ஏற்பட்டுக் கபிலநிறமாக மாறிவிடுகிறது. அதனுடைய முகமும் சீக்கிரம் கறுப்பாய்விடுகிறது. சாதாரணபூனைகளைவிட இவைகள் சாமர்த்தியம் அதிகமுள்ளனவாகவும் நாய்கள்போல உறவாடிக்கொண்டுமிருக்கின்றன. இவைகள் லண்டன் நகரத்திற்கு ஏற்றுமதிசெய்யப்படுகிறனவாம்.

※ ※ ※

சிற்றூர்ச்சந்தைப் பேட்டையிலுள்ள சாலைக்குப் பக்கத்தில் ஒரு மரத்தின் கீழ் ஒரு பெரிய பாம்புப் புற்று இருக்கின்றது. அதன் மேல் ஒரு பெரிய நாகம் குளிர்காற்றுக்குடிக்கும் பொருட்டு அச்சமின்றிப் படுத்துறங்கிக்கொண்டிருந்தது. இதைக் கண்ணுற்ற ஒரு கருடன் அவ்வரவத்தை அடித்துக் கொண்டு போக நினைத்து அந்தப் புற்றின் அருகே உட்கார்ந்தது. இதை அறிந்த நாகம் உடனே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து பறவையின் கால்களை இறுகப் பற்றிக் கொண்டது. கருடனோ தன்னால் இயன்ற வரை பிடியினின்றும் விடுபட முயன்றும் பயனில்லை. அப்போது அவ்வழியே வண்டி ஓட்டிச் சென்ற குடியானவன் ஒருவன் இந்தப் பிராணிகளின் அதிசய யுத்தத்தைப் பார்த்துப் புற்றின் சமீபம் போந்து அப் பாம்பைத் தன் கோலால் இரண்டடி அடித்தான். அதன் மேல் அப் பாம்பு பிடியை விட்டுப் புற்றில் போய் மறைந்து கொண்டது. பிறகு கருடனும் ஆபத்தினின்றும் விலகி உயரப் பறந்து போயிற்று. ஆனால் இச் சம்பவத்தின் பின் விளைவுதான் மிக்க விநோதமாகும். அப் பாம்பு வண்டிக்காரனைக் கடித்துக் கொல்ல மனதில் வைரம் கொண்டது போலும். குடியானவன் அவ்வழியே வண்டி ஓட்டி வருவானென்று எதிர்பார்த்து அது பாதைக்குச் சரியாக ஒரு மரத்தின் கிளையில் தொங்கிக் கொண்டு காத்திருந்ததெனத் தெரிகிறது. குடியானவன் முன்னர் நடந்தநிகழ்ச்சியின் நினைவில்லாமல் நான்கு நாட்கள் கழித்து அவ் வழியே சந்தோஷமாக வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தான். அந்த நல்ல பாம்பு இவனை அடையாளந் தெரிந்து கொண்டு மரக் கிளையின் நேராக வரும்போது குறிப்பாக அவன் மேல் சீறி விழுந்தது. ஒரு மாத்திரை தவறி இருப்பின் குடியானவன் விண்ணுலகஞ் சென்றிருப்பான். ஆனால் முன்னே அக் குடியானவனால் காப்பாற்றப்பட்ட கருடன் அதிசயிக்கும் வண்ணம் அதே நொடியில் தோன்றி அப்பாம்பின்மீது பாய்ந்து அதைக் கௌவிக் கொண்டு போய் ஒரு மரத்தின் மீது வைத்து மூக்கால் கொத்திக் கொன்றதாம். பாம்பு வஞ்சம் வைத்துக் கடிக்குமென அறிந்து கருடனும் அப் பாம்பின் மீது நாட்டம் வைத்திருந்தது போலும். இந்தச் செய்தி முற்றிலும் உண்மையாயிருந்தால் இதனைப் பெரியதோர் அதிசயமென்றே சொல்ல வேண்டும்.

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்.

### திருநெல்வேலிச் சைவஆசிரியர்கலாசாலை.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பெற்ற இக் கலாசாலையில் இப்பொழுது இருபது (20) மாணவர்கள் கற்கின்றனர். இதற்குத் தலைவராக நியமிக்கப்பெற்ற ஸ்ரீமான் கிருஷ்ணபிள்ளை அவர்கள் சென்ற வியாழக்கிழமை தொடக்கம் தமது வேலையை ஏற்று நடத்துகின்றார். இவரது தலைமையின் கீழ் இக் கலாசாலை உன்னத நிலையை யெய்தும். இக் கலாசாலையில் ஓர் பிரவேச வகுப்பும் வைத்து நடாத்தப்படும். எட்டாம் வகுப்பில் அல்லது பூர்த்தி வகுப்பிற் சேரலாம். 1929 ம் ஆண்டு ஜனவரிமீ 7-ம் திகதிக்குப் பிந்தாது வந்து சேர வேண்டியது.

### சைவ அநாதப்பிள்ளைகள் சாலை.

மேற்படி சங்கத்தாரால் திருநெல்வேலியில் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கும் இச்சாலையில் இப்பொழுது பன்னிரண்டு (12) மாணவர்கள் சேர்ந்திருக்கின்றனர். இன்னுமனேகர் சேரக் கேட்கின்றனர். திருநெல்வேலி வாசராகிய ஸ்ரீ S. சபாபதிப்பிள்ளை அவர்கள் தற்போது இச்சாலையை நடத்துவதற்குப் பேருதவி செய்கின்றார். முத்துத்தம்பி வித்தியாசாலையும் இவரது நன்முயற்சியினாலேயே நடைபெறுகின்றது. அப்பெரியார் தமது தோத்தையும் எங்கள் நாட்டில் சைவசமய வளர்ச்சிக்காகிய முயற்சிகளிற் செலவழிக்கின்றனர்.

சைவ அநாதச் சிறுவர்கள் எல்லோரும் கற்கத்தக்கதாக இச்சாலையைப் பெரிதாகக் கட்டவேண்டுமென்பதே இச்சங்கத்தாரின் நோக்கம். இப்பொழுது வாடகை வீட்டில் இச்சாலை ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றது. முந்நூறு மாணவர்க்குக் குறையாதோர் கற்றற்கேற்ற கட்டடங்கள் அமைக்க வேண்டுமென்றும் இம்மாணவர் கமத்தொழில், கைத்தொழில், நெசவுத்தொழில், அச்சுக்கூட வேலை ஆதியன கற்பதற்கேற்ற வசதிகள் செய்ய வேண்டுமென்பதே இச்சங்கத்தின் முழு நோக்கம். இதற்குப் பெருந்தொகைப் பணம் வேண்டும். அநாதப் பிள்ளைகளுக்கு அன்னதானமும் வித்தியாதானமும் செய்து தமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கக்கூடியவர்களாய் வாசசெய்யும் இப்புண்ணியச் செய்கைக்கு உதவிசெய்ய முன்வருவர்கள் என்பதே எமது முழு நம்பிக்கை.

### கோப்பாய் சரவணபவாநந்தவித்தியாசாலை.

இப்பாடசாலை மாணவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு இளையான் குடிமாற நாயனார் சரித்திரத்தை நாடக நடமாய் நடித்துக் காட்டினர். நாடக ஆரம்பத்தின்முன் இராசவாசல் முதலியார் நாகநாதர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது. பெருந்தொகைச் சனங்கள் குழுமியிருந்தனர். கௌரவஸ்ரீஇராசரத்தினமவர்களும் A. சீதாராம்ஐயாவர்களும் பள்ளிக்கூட வளர்ச்சிக்கு ஒரு புதியகட்டடம் இன்றியமையாதது என்று எடுத்துக் காட்டிச் சபையாரை உதவி செய்யும்படிகேட்டனர். மாணவர்கள் எவரும் சந்தோஷிக்கத்தக்கவிதமாக நடித்தனர். இந்நாயனார் கதையை நாடகநடமாயியற்றி மாணவர்களைப் பயிற்றியவர் இப்பள்ளிக்கூடத் தலைமையாசிரியராகிய ஸ்ரீ சிதம்பரப்பிள்ளை அவர்களே. —கடித.

(முதலாம் பக்கத் தொடர்பு.)

### அரசாங்க வைத்திய சுகாதார வெளியீடு.

வகைகளுக்கு உதவியாயிருக்கும். இதற்குமுன் எழுதப்பட்ட கட்டுரையொன்றில் அவைகளைப்பற்றிப் பின்னாற் சொல்லப்படும் விதமாய் விரித்துரைக்கப்பட்டிருக்கிறது.

(1) மிருகசாதியின் மூலமாய் உண்டாகும் சிற்சில நோய்களைத் தவிர மற்றும் தொற்று வியாதிகளெல்லாம் மானிடதேகத்தில் ஜீவிக்கும் மிகவுஞ் சிறிய கிருமிகளினால் உண்டுபடுகிறது.

(2) இன்புளுஎன்சாக் காய்ச்சல், சுவாதக் காய்ச்சல், கண்டக்கரப்பன், குக்கல், சின்னமுத்து முதலிய நோய்களின் காரணமாய் மூக்கிலும் தொண்டையிலுமிருந்து கழியுஞ் சளி, கபம் முதலியவைகளில் அந்தநோய்கள் சம்பந்தமுள்ள கிருமிக் கூட்டங்களும், நெருப்புக்காய்ச்சல், வயிற்றுளைவு பேதி முதலிய குடலிலுண்டுபடும் நோய்களின் காரணமாய்த் தேகத்திலிருந்து வெளிவரும் கழிவுகளில் அந்த நோய்கள் சம்பந்தமாயுள்ள கிருமிக்கூட்டங்களும் உடம்பைவிட்டு வெளியே வரும். மலேரியாக் காய்ச்சல், டெங்குபீவர் என்று சொல்லப்படும் உடம்புளையுங் காய்ச்சல், யெல்லோ பீவர்முதலிய நோய்களுக்குரிய கிருமிக் கூட்டங்கள் நோயாளியின் இரத்தத்திலிருந்து பூச்சிகளினால் வெளியே கொண்டுவரப்படுகிறது.

(3) இக்கிருமிப் பூச்சிகள் மானிடதேகத்திலுள்ள அவைகளின் இல்லத்திலிருந்துவெளியே வந்துவிட்டோர்தால் நெடுகாலத்திற்கு உயிரோடிருக்கமாட்டா.

(4) ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு [illegible] பூச்சி புழுக்கள் மூலமாயும், உணவுகள் பானங்கள் மூலமாயும், ஒருவருடன் இன்னொருவர் நெருங்கி முட்டுதலாலும் தொற்றிப் பரவும்.

தொற்று வியாதிகளை அடக்கி ஆளும் வழிவகைகளை இரண்டு காலங்களில் ஏற்படுத்திக் கொள்ளலாம். ஒருகாலம் நோய் கொள்ளையாக உண்டுபட முன்னும் மற்றக்காலம் நோய் தொற்றிப் பரவும்பொழுதும் அதை அடக்கிக்கொள்வதற்கு வேண்டிய வழிகளைச் செய்துகொள்ளலாம். அதிஷ்டவீனமாய், நோய்தொற்றி உபத்திரவம் ஏற்பட்ட பின்புதான் அதற்குச் செய்ய வேண்டியகாரியங்களைச் செய்துகொள்ளவேண்டுமென்னும்எண்ணம் எங்குமிருக்கின்றது. அவ்வளவும் எங்களுக்குப் பிரியமானபடி நடந்து

